2013 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

131—

குளிர்சாதனப் பேருந்து

***26528—திரு. கார்த்திக் தொண்டைமான்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு நான்கு சாதாரணப் பேருந்துகள், இரண்டு சொகுசுப் பேருந்துகள், இரண்டு அதிநவீன சொகுசுப் பேருந்துகள் என நாளொன்றுக்கு எட்டு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த எட்டு பேருந்துகளில் சராசரியாக இருக்கைகளினுடைய எண்ணிக்கையில் 80 சதவீதம் அளவுக்கு மட்டுமே பயணிகள் பயணிக்கிறார்கள். பயணிகளுடைய எண்ணிக்கை அதிகரிக்கின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.

திரு. கார்த்திக் தொண்டைமான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரங்கம் கோபுரத்தின் உயரம்போல, புகழ் கோபுரத்தின் உயரம் என மக்கள் மன்றத்தில் வீற்றிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவடி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய சூழ்நிலையில் தினமும் அதிகப்படியான பொதுமக்கள் புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்துகளில் பயணம் செய்வதற்கு திருச்சிக்குச் சென்றுதான் சென்னைக்கு வரவேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே, அம்மா அவர்களின் வெற்றிக் கோட்டையான புதுக்கோட்டையிலிருந்து புனித ஜார்ஜ் கோட்டை, சென்னைக்கு வருவதற்கு குளிர் சாதனப் பேருந்தை இந்த ஆண்டு இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலிருந்தும் சென்னைக்கு மக்கள் வசதியாக வந்து செல்வதற்கு குளிர்சாதனப் பேருந்துகள் இயக்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். முதற்கட்டமாக, கோயம்புத்தூர் மற்றும் மதுரையிலிருந்து குளிர்சாதனப் பேருந்துகளை இயக்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று, புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்திக் தொண்டைமான் அவர்கள்.*

திரு. கார்த்திக் தொண்டைமான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து நன்றி கூறி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

2013 ஏப்ரல் 2]

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சொந்த ஊரான திருவள்ளூர் மாவட்டம், பூரிவாக்கம் கிராமத்திற்குப் பேருந்து இயக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தபோது, அடுத்த நாளே மாநகரப் பேருந்தினை இயக்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் திருவள்ளூர் மாவட்ட மக்களின் சார்பாக முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது தருமபுரி மாவட்டத்தில், Ultra Deluxe சொகுசுப் பேருந்துகள் 5 இயங்கி வந்தன. அதில் 4 பேருந்துகள் திடீரென்று நிறுத்தப்பட்டுவிட்டன. தற்போது ஒரே ஒரு பேருந்து மட்டும் இயக்கப்பட்டு வருகிறது. நிறுத்தப்பட்ட அந்த நான்கு பேருந்துகளை மீண்டும் இயக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

மேலும், 36 வருடங்களாக, 36 ஆம் எண் கொண்ட ஒரே ஒரு டவுன் பஸ் மட்டும் 21 கிராமங்களுக்கு, தருமபுரியிலிருந்து கம்பைநல்லூர் வரையிலான கிராமங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறது. அந்தப் பகுதியில் கூடுதலாக ஒரு பேருந்தை இயக்கக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், 36 வருடங்களாக ஒரே ஒரு பேருந்து மட்டும் அந்தப் பகுதி மக்களுக்காக ஓடிக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. டில்லி பாபு, கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. ப. டில்லி பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே கூடுதலாக ஒரு பேருந்தை அந்தப் பகுதியில் இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கிற அனைத்துப் பகுதிகளிலும், அது கிராமங்களாக இருந்தாலும் சரி, நகரங்களாக இருந்தாலும் சரி, எந்தப் பகுதியிலும் பேருந்து வசதிகள் இல்லையென்ற நிலையே இருக்கக்கூடாது என்று மாண்புமிகு

முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுடைய வசதிகளுக்கேற்ப, மக்களுடைய தேவைகளுக்கேற்ப, ஆட்சிக் கட்டிலில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 1,353 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் துவக்கி வைக்கப்பட்டு, இன்று மக்களுக்கு அந்தப் பேருந்துகள் சேவையை வழங்கிக் கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போதுதான் இந்தக் கேள்வியை எழுப்பி இருக்கின்றார். இதுவரை என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. நிச்சயம் இந்த ஆட்சியின் இரண்டு ஆண்டுகளில் அந்தப் பேருந்துகள் நிறுத்தப்பட்டு இருக்காது. உடனடியாக துறையின் சார்பாக அவரது கோரிக்கை ஆய்வு செய்யப்பட்டு, அந்தப் பகுதியில் தேவையான கூடுதல் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவு பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது பதில் அளிக்கும்போது, நம்முடைய மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் எந்தப் பகுதியிலும் தமிழ்நாட்டிலே பேருந்துகள் இல்லாமல் இருக்கக்கூடாது என்று உத்தரவிட்டிருப்பதாகக் கூறினார்கள்; வரவேற்கின்றோம்.

என்னுடைய பட்டுக்கோட்டை தொகுதியைப் பொறுத்தவரையில், இந்த ஆட்சி பொறுப்பேற்றபோது, நான் இந்த மாமன்றத்தில் கேட்ட முதல் கேள்வியை, மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்ட முதல் கேள்வியையே மீண்டும் கேட்கின்றேன். பட்டுக்கோட்டை தொகுதியில் உள்ள ஒரியடிக்காடு என்ற கிராமத்திற்குள் பேருந்து செல்வதில்லை. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய பத்தங்காடு என்ற பகுதியில் ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். அந்தப்

2013 ஏப்ரல் 2]

பகுதிக்கு பேருந்து வசதி என்பதே சுத்தமாக இல்லாமல் இருக்கிறது. எனவே, என்னுடைய கோரிக்கையை மறுபரிசீலனை செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே பேருந்து விடுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குத் தேவையான, சரியான பேருந்து வசதிகளை இயக்குவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 6,000 புதிய பேருந்துகளை வழங்கி, அதில் 2,885 பேருந்துகளை மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரங்களால் கொடியசைத்து இயக்கி வைத்து இன்று மக்களின் பயன்பாட்டிற்காக, பயணிகளின் வசதிக்காக அவை சென்று கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

புதிய பேருந்துகளுக்கான கூண்டுகள் கட்டி முடிக்கப்பட்டு மக்களுடைய பயன்பாட்டிற்கு வரும்போது மாண்புமிகு உறுப்பினர் கோருகின்ற அந்தப் பகுதியில் பேருந்துகள் இயக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

132—

புதிய கட்டடம்

***6593—திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?